Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, APRIL 17 2025

வியாழக்கிழமை 17, ஏப்ரல் 2025 | ஒளி: 10 கதிர் 200 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# "ஜனாதிபதி யாரையும் பாரபட்சமாக நடத்த முடியாது"



உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை கைப்பற்றும் கட்சிகள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்தே குறித்த மன்றங்களுக்கு நிதி வழங்குவோம் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கருத்து வெளியிட்டிருக்கிறார்.

ஜனாதிபதி அவ்வாறு கூறினாலும் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெறும் உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக வழங்கப்படும் சேவைக்கான பொறுப்பை நான் ஏற்றுக் கொள்வேன் எனவும் தெரிவித்துள்ளார்.

இனம், மதம், சாதி, வர்க்கம், கட்சி வேறுபாடின்றி நாட்டு மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே ஜனாதிபதி நியமிக்கப்படுகின்றார். அவ்வாறு இல்லாது ஜே.வி.பிக்கு மாத்திரம் சேவையாற்றுவதற்காக நியமிக்கப்படவில்லை. ஜனாதிபதியானவர் கட்சி, சாதி, இனம், மதம் பாராமல் அனைவருக்கும் சமமான சேவையை வழங்க வேண்டும். ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்த கருத்தை வன்மையாக கண்டிக்கிறேன். இவ்வாறான அரசியல் அச்சுறுத்தல்களை கண்டு சளைக்க வேண்டாம் என்றும் கூறியுள்ளார்.

பொத்துவில் - அக்கரைப்பற்று பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை (15) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## இன்று முதல் வாக்காளர் அட்டைகள் விநியோகம்

எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெற உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் புதன்கிழமை (16) அன்று அஞ்சல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக அஞ்சல் மா அதிபர் ருவன் சத்குமார அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி அனுர இன்று யாழ். பயணம்



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இன்று வியாழக்கிழமை (17) யாழ்ப்பாணத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தில் பல பொதுக் கூட்டங்களிலும் ஜனாதிபதி உரையாற்ற உள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் களமிறங்கியுள்ள வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபடும் நோக்கிலேயே ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ரணிலின் கோரிக்கை நிராகரிப்பு

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தனுடன் உரையாடுவதற்கான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்வைத்த கோரிக்கையை சி.ஐ.டியினரால் நிராகரிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## "விரைவில் சமர்ப்பியுங்கள்"



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்பதே தமது அரசாங்கத்தின் நிலைப்பாடு அச்சட்டத்தை நீக்குவது தொடர்பான பரிந்துரைகளை விரைந்து சமர்ப்பிக்க வெள்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி ரின்ஸி அர்ஸகுலரத்ன தலைமையிலான குழுவினரிடம் என சுட்டிக்காட்டியுள்ள நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## தலைக்கு எண்ணெய் தேய்க்கும் நிகழ்வு



தமிழ் – சிங்கள புத்தாண்டு சம்பிரதாயங்களின்படி, நடைபெறும் தலைக்கு எண்ணெய் தேய்க்கும் நிகழ்வு, புதன்கிழமை (16) காலை கதிர்காமம் – கிரிவெஹெர, ராஜமஹா விஹாரையில் விகாராதிபதி வண. கோபவக தம்மிந்த தேரர் தலைமையில் நடைபெற்றது.





## இஸ்ரேலியர்களுக்கு மாலைத்தீவு தடை



இஸ்ரேலிய கடவுச்சீட்டை வைத்திருப்பவர்கள் மாலத்தீவு குடியரசிற்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே நடந்து வரும் போருக்கு பதிலளிக்கும் விதமாக, மாலைத்தீவு ஜனாதிபதி அலுவலகம் செவ்வாய்க்கிழமை (15) அன்று இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## "ஆளுநர்களின் அதிகாரங்களை குறையுங்கள்"



மாகாண சபை முறையைப் பலப்படுத்துவதற்கு ஆளுநர்களின் அதிகாரங்களை குறைத்து, மக்களினால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளுக்கு மேலதிக அதிகாரங்களை அளிப்பது தொடர்பில் ஆராய்வதற்கு அமைச்சர்கள் மட்டத்திலான குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை, அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

தொடர்ச்சி P2

## 800 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை



மதுபோதையில் வாகனம் செலுத்திய சுமார் 800 சாரதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன், மதுபோதையில் வாகனம் செலுத்துவோரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## சிறப்பு ரயில் சேவைகள்

தமிழ் - சிங்கள புத்தாண்டுக்குப் பிறகு தங்கள் சொந்த ஊர்களில் இருந்து கொழும்பு திரும்புபவர்களின் பயணத்தை எளிதாக்கும் வகையில், நாளை வெள்ளிக்கிழமை 18, சனிக்கிழமை 19 மற்றும் ஞாயிற்றுக்கிழமை 20 ஆகிய திகதிகளில் சிறப்பு ரயில் சேவைகள் இயக்கப்படும் என்று இலங்கை ரயில்வே பொது மேலாளர் ஜே.ஐ.டி.ஜெயசுந்தர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அவசர தொலைபேசி இலக்கம்




கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும், கடலில் ஏற்படும் அவசர நிலைமைகளின் போது விரைவான நடவடிக்கைகளை உறுதி செய்வதற்கும், இலங்கை கடலோர பாதுகாப்பு திணைக்களம் (SLCG), அதன் செயல்பாட்டு அறையுடன் நேரடியாக இணைக்கப்பட்ட 24 மணி நேர விசேட அவசர தொலைபேசி இலக்கமான '106' ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

## விபத்து பிரிவில் 412 பேர் அனுமதி

தமிழ் மற்றும் சிங்கள பண்டிகை காலத்தில் இடம்பெற்ற பல்வேறு விபத்துகளில் காயமடைந்து சுமார் 412 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் இந்திக ஜாகொட தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



### 3 வாகனங்கள் மோதி விபத்து:

## இருவர் பலி; இருவர் படுகாயம்

குருணாகல் - தம்புள்ளை ஏ6 வீதியில் செவ்வாய்க்கிழமை (15) அதிகாலை இடம்பெற்ற விபத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் படுகாயமடைந்துள்ளதாக தொரட்டியாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்கிரியாகம பிரதேசத்தைச் சேர்ந்த 37 மற்றும் 43 வயதுடைய இருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தம்புள்ளையிலிருந்து குருணாகல் நோக்கிப் பயணித்த கெப் வாகனம் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# “ஜனாதிபதி யாரையும் பாரபட்சமாக நடத்த முடியாது”

மேலும், சமீபத்தில், நமது நாட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், பலஸ்தீன மக்கள் குறித்து அவர் கருதிய கருத்தை ஸ்டிக்கர் ஒட்டி வெளிப்படுத்தியிருந்தார். அவ்விளைஞர் பலஸ்தீன மக்கள் சார்பாக தனது கருத்துக்களை முன்வைத்த போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பயங்கரவாத தடைச் சட்டத்தினை பிரயோகித்து கைது செய்தார். ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச கூட பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக முன்நின்றார். ஆதரவான நிலைப்பாடுகளை எடுத்தார். பலஸ்தீன மக்களுக்கு எதிராக அரச பயங்கரவாதம் முன்னெடுக்கப்பட்ட சமயங்களில், பாரிய படுகொலைகள் இடம்பெற்ற சந்தர்ப்பங்களில், அப்போது எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அனுரகுமார திசாநாயக்க குரல் எழுப்பினார். இன்று பலஸ்தீன மக்கள் சார்பாக நமது நாட்டைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் குரல் எழுப்பிய சமயத்தில் தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, அவருக்கு எதிரான தடுப்புக் காவலில் வைக்கும் பத்திரத்தில் கையொப்பமிடும் அளவுக்கு கீழ்த்தரமாக நடந்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியிடம் இரட்டைக் கொள்கைகளும் இரட்டை நாடகங்களும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி பலஸ்தீன மக்களுக்காக நின்றது. இஸ்ரேலிய அரசும் பலஸ்தீன அரசும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

ஜே.வி.பி. அரசாங்கத்திற்கு பொய் சொல்லவும் ஏமாற்றவும் மட்டுமே தெரியும். அன்று தேர்தல் மேடையில் சொன்னதை இன்று செய்ய முடியாது புலம்பிக் கொண்டிருக்கின்றனர்.

இன்று மக்களுக்கு வறுமையும், அசௌகரியமும் அதிகரித்துள்ளன. இவ்வாறான நிலையில் வறுமையை ஒழிக்கும் வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும். இதற்கான வலுவான முறையான வேலைத்திட்டமொன்று அவசியம் முன்னெடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இன்று முதல் வாக்காளர்...

அத்துடன், வீடுகளுக்குச் சென்று வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் இன்று வியாழக்கிழமை (17) முதல் ஆரம்பிக்கப்படும் எனவும், குறித்த பணிகள் எதிர்வரும் 29ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை, வாக்காளர் அட்டையை விநியோகிப்பதற்கான விசேட நாளாக ஒதுக்கப்பட்டுள்ளது.

திட்டமிட்டபடி மே மாதம் 6ஆம் திகதி சுமார் 250 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

அதேவேளை, தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து வழக்கின் விசாரணைக்குப் பின்னர் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதனிடையே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், குறித்த மனுக்கள் மற்றும் நீதிமன்ற தீர்ப்புகளின் பிரதிகளை அனுப்புமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## இருவர் பலி...

விபத்தில் முச்சக்கர வண்டியின் சாரதியும் பின்புறத்தில் பயணித்த இருவரும் மோட்டார் சைக்கிளின் ஓட்டுநரும் படுகாயமடைந்துள்ள நிலையில் குருணாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் முச்சக்கரவண்டியின் சாரதி மற்றும் பின்புறத்தில் பயணித்த நபரொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் படுகாயமடைந்துள்ளவர்கள் சிகிச்சை உள்ளனர் பொலிஸார் கூறியுள்ளனர்.

## இஸ்ரேலியர்களுக்கு மாலைத்தீவு தடை

இந்த நடவடிக்கை, பாலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் தொடர்ந்து செய்து வரும் அட்டூழியங்களுக்கு எதிரான மாலைத்தீவின் "உறுதியான நிலைப்பாட்டை" பிரதிபலிக்கிறது என்று ஜனாதிபதி முய்ஸி கூறினார்.

ஜனாதிபதி டாக்டர் முகமது முய்ஸு ஒப்புதல் அளித்த மாலைத்தீவு குடியேற்றச் சட்டத்தில் திருத்தம் இஸேரலியர்களைத் தடை செய்தது,

அந்த அறிக்கையின்படி, “பாலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் தொடர்ந்து செய்து வரும் அட்டூழியங்கள் மற்றும் தொடர்ச்சியான இனப்படுகொலைச் செயல்களுக்குப் பதிலளிக்கும் விதமாக அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாட்டின்" பிரதிபலிப்பாகும்.

“பாலஸ்தீன நோக்கத்துடனான அதன் உறுதியான ஒற்றுமையையும், பாலஸ்தீன மக்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் அதன் நீடித்த உறுதிப்பாட்டையும் மாலைத்தீவு அரசாங்கம் மீண்டும் உறுதிப்படுத்துகிறது” என்று ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

“சர்வதேச சட்ட மீறல்களுக்கு பொறுப்புக்கூறலுக்காக மாலத்தீவுகள் தொடர்ந்து வாதிடுகின்றன, மேலும் இஸ்ரேலின் செயல்களைக் கண்டித்து பல்வேறு சர்வதேச தளங்களில் குரல் கொடுத்து வருகின்றன.”

1949ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், கிழக்கு ஜெருசலேமை தலைநகராகக் கொண்டு, ஒரு சுதந்திர பாலஸ்தீன அரசை நிறுவுவதற்கான தனது அழைப்பை ஜனாதிபதி அலுவலகம் மீண்டும் வலியுறுத்தியது. உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் அலி இஹ்சான் ஜூன் மாதம் இஸ்ரேலிய கடவுச்சீட்டுகளைத் தடை செய்யும் அரசாங்கத்தின் முடிவை அறிவித்தார். தேவையான சட்டங்களைத் திருத்தவும், முயற்சிகளை மேற்பார்வையிட ஒரு துணைக்குழுவை நிறுவவும் அமைச்சரவை தீர்மானித்தது.

அக்டோபர் 7 படுகொலையைத் தொடர்ந்து அதன் இராஜதந்திர விரோதம் அதிகரித்து வருவதால், மாலைத்தீவுகள் நீண்ட காலமாக இஸ்ரேலுக்கு விரோதமாக இருந்து வருகின்றன.

பாராளுமன்றத்தின் தொடக்கக் கூட்டத்தொடரில் ஜனாதிபதியின் பெப்ரவரி 2025 ஜனாதிபதி உரை, அதன் வெளியுறவுக் கொள்கையில் பாலஸ்தீனக் காரணத்தின் முன்னுரிமையை வலியுறுத்தியது.

ஒக்டோபரில், காசாவில் நடந்ததாகக் கூறப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக தென்னாப்பிரிக்காவின் சர்வதேச நீதிமன்ற விண்ணப்பத்திற்கான தலையீட்டு அறிவிப்பைத் தனது நாடு தாக்கல் செய்துள்ளதாக முய்சு அறிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி இப்ராஹிம் முகமது சோலிஹ், ஒக்டோபர் 2023இல், பாலஸ்தீனியர்களுக்கான நாட்டின் அர்ப்பணிப்பு நாட்டின் இஸ்லாமிய தன்மை காரணமாகும் என்று கூறினார்,

ஏனெனில், “உலகளவில் ஒடுக்கப்பட்ட முஸ்லிம்களின் துன்பத்தைத் தணிக்கக் கூட்டாகப் பணியாற்றுவது முழு இஸ்லாமிய உம்மாவின் புனிதமான பொறுப்பு” என்று அவர் நம்பினார்.

மாலைத்தீவில், வெளியுறவு அமைச்சக குடியேற்ற வலைத்தளத்தின்படி, முஸ்லிம்களால் மட்டுமே குடியுரிமை பெற முடியும்.

## “ஆளுநர்களின் அதிகாரங்களை...

இதுதொடர்பில் ‘பொருளாதாரத்தை பாதுகாக்கவும் நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் அவசரமான சீர்திருத்தங்கள் தேவை’ என்ற தலைப்பில் பேரவையின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது,

இலங்கையின் ஏற்றுமதிகள் மீது விதிக்கப்படவிருக்கும் வரிகள் தொடர்பாக அமெரிக்க அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு இலங்கைக்கு மூன்று மாத கால அவகாசம் கிடைத்திருக்கிறது. இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதிச் சந்தையாக அமெரிக்கா விளங்குவதால் இந்த வரி விதிப்பு அதி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி.ப்ளஸ் வரிச் சலுகையை தற்போது அனுபவித்துவரும் இலங்கை அதன் ஏற்றுமதி சந்தைகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்துடனும் இதையொத்த சவாலை எதிர்நோக்குகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிக்குறைப்பு சலுகையை இலங்கை தொடர்ந்து அனுபவிக்க வேண்டுமானால் மனித உரிமைகள் தொடர்பான 27 விசேடமான சமவாயங்களை உறுதியாகப் பின்பற்ற வேண்டும் என்ற நிபந்தனை இருக்கிறது.

அமெரிக்கா, சீனா, ஐரோப்பா அல்லது இந்தியா என்று எந்த முக்கியமான வல்லரசுடனும் ஒத்துழைப்பு உறவுமுறையொன்றைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமானது என்ற யதார்த்த நிலையை ஏற்றுக்கொண்டு வாழ்வதற்கு அரசியல் தலைமைத்துவம் உட்பட இலங்கையர்கள் பழகிக்கொள்ள வேண்டும்.

ஜி.எஸ்.பி.ப்ளஸ் வரிச் சலுகை தொடர்ந்து கிடைப்பதற்கு இலங்கை பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை விதந்துரைக்கும் தீர்மானம் ஒன்றை ஐரோப்பிய பாராளுமன்றம் 2021இல் நிறைவேற்றியது என்பதை தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்ட விரும்புகிறது. 1979இல் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் அடாத்தான கைதுகள், நீண்டகால தடுப்புக்காவல், மட்டப்படுத்தப்பட்ட நீதித்துறை மேற்பார்வை, சந்தேக நபர்கள் பொலிஸாருக்கு அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களை குற்றவாளிகளாக காண்பது ஆகியவற்றுக்கு அனுமதிக்கும் ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதன் காரணத்தினால் பரந்தளவில் மிகவும் கடுமையான கண்டனத்துக்கு உள்ளாகி வந்திருக்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பயங்கரவாத தடைச்சட்டம் மிகவும் மோசமான முறையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட வரலாறு ஒன்று இருக்கிறது.

அவ்வாறான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான விதப்புரைகளைச் செய்வதற்கு குழுவொன்றை நியமிப்பதற்கு நீதியமைச்சர் சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை அங்கீகரித்திருப்பதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில் செய்த அறிவிப்பை தேசிய சமாதானப் பேரவை வரவேற்கிறது. பயங்கரவாத தடைச் சட்டம் இல்லாமலேயே குற்றச் செயல்களைக் கையாளக்கூடிய சட்டங்கள் இருக்கின்றன. அவை மிதமிஞ்சியவையாக உள்ளன என்று பலரும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒழிப்பதாக தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்ட நிலையில், அந்த சட்டத்தை ஒழிப்பது தொடர்பாக ஆராய குழுவொன்றை நியமிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் ஜி.எஸ்.பி ப்ளஸ் வரிச் சலுகையை புதுப்பிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் வித்தக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கு காலத்தை இழுத்தடிக்கும் ஒரு செயற்பாடாக நோக்கப்படக்கூடாது.

காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினை, போர்க்கால மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்காலத்தில் இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை அவற்றின் உரிமையாளர்களுக்கு திருப்பிக் கையளித்தல் போன்ற நீண்டகால பிரச்சினைகளுக்கு தீராவுகளைக் காண்பதற்கு துரிதமானதும் பயனுறுதியுடையதுமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம் என்றார்.

## ரணிலின் கோரிக்கை...

ரணில் விக்ரமசிங்க கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி, பிள்ளையான் உடன் தொலைபேசி மூலம் உரையாட அனுமதிக்குமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால், அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

தடுப்பு காவலில் உள்ள ஒருவருடன் தொலைபேசியில் உரையாடுவது சட்டவிரோதமான செயல் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவுக்கு பிள்ளையானை சந்திப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டதாகவும், அவர் பிள்ளையானின் சட்டத்தரணியாக செயற்பட்டமையால் அந்த அனுமதி வழங்கப்பட்டது என்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையின் கீழ், 18 ஆண்டுகளின் பின்னர் கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி பிள்ளையான் கைது செய்யப்பட்டு தற்போது குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## “விரையில் சமர்ப்பியுங்கள்”

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பான கலந்துரையாடல் நீதி, சிறைச்சாலைகள் மற்றும் இன ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையில் கடந்த வாரம் நீதி அமைச்சில் நடைபெற்றுள்ளது.

இதன்போதே நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது, நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார வெளியிட்டுள்ள கருத்தில்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்பதே தமது அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று, ‘இதற்குப் பதிலாகப் புதிதாகக் கொண்டுவரப்படக்கூடிய சட்டமானது உலகளாவிய பயங்கரவாதம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சவால்களுக்குத் திறம்பட முகங்கொடுக்கக்கூடிய வகையில் அமைய வேண்டும். அத்துடன், அச்சட்டம் சர்வதேச நியமங்கள் ஊடாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, எமது நாட்டின் அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள மனித உரிமைகள் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம் என்பவற்றைப் பாதிக்காத வகையிலும் இருக்கவேண்டும்’ என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, கடந்தகால அரசாங்கங்கள் பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்குவதற்குரிய அர்த்தபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் முன்னெடுக்கவில்லை என விசனம் வெளியிட்ட அவர், எனவே தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் குழுவானது மிகக்குறுகிய காலத்துக்குள் பயங்கரவாதத்தடைச்சட்டத்தை இல்லாதொழிப்பதுடன் தொடர்புடைய விடயங்களை சமர்ப்பிக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

எதிர்வரும் மேமாத தொடக்கத்திலிருந்து இதுகுறித்து பொதுமக்கள் மற்றும் சிவில் சமூகங்கள் உள்ளடங்கலாக சம்பந்தப்பட்ட தரப்பினரின் கருத்துக்களை அறிந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது குறித்து ஆராய்வதற்காகக் கடந்த பெப்ரவரி மாத இறுதியில் ஜனாதிபதி சட்டத்தரணி ரின்ஸி அர்ஸகுலரத்ன தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினரும் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 800 சாரதிகளுக்கு எதிராக...

லேும் சொந்த இடங்களுக்குச் சென்ற மக்கள் மீண்டும் கொழும்புக்கு வரும் நிலையில், வீதிகளில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும். இதனால் வீதிகளில் வாகன விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த நாட்களில் நாளொன்றுக்கு 5 வரையான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடுமையான காயங்கள் ஏற்பட்ட 10 க்கும் மேற்பட்ட சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அவசர தொலைபேசி இலக்கம்

இந்த இலக்கத்தினூடாக, கடல்சார் அவசர சூழ்நிலைகளில் பதிலளிக்கும் நேரத்தைக் குறைப்பதையும் ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும் எதிர்ப்பாக்கப்படுகிறது.

பொதுமக்கள், மாலுமிகள் மற்றும் கடலோர சமூகங்களுக்கு உடனடி மற்றும் நேரடி தொடர்பை வழங்குவதன் மூலம், SLCG செயல்பாட்டுத் தயார்நிலையை மேம்படுத்தவும் கடல்சார் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் தேசிய நோக்கங்களை வலுப்படுத்தவும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

பாதுகாப்பு, மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மையமாகக் கொண்ட ஒரு முக்கிய ஆணையுடன், கடலோர பாதுகாப்பு திணைக்களம் எண்ணெய் கசிவுகளைச் சுத்தப்படுத்துதல் மற்றும் தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள், மனித கடத்தல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் கடலில் ஏற்படும் பிற அவசரநிலைகள் உள்ளிட்ட பல்வேறு கடல்சார் நிலைமைகளைக் கட்டுப்படுத்த பங்களிக்கிறது.

இலங்கை கடலோர பாதுகாப்பு திணைக்களம் மீனவர்கள், கடலுடன், தொடர்புடையவர்கள் மற்றும் பொதுமக்கள் 106 என்ற அவசர எண்ணைப் பயன்படுத்தி கடல்சார் அவசரநிலைகளை உடனடியாகப் புகாரளிக்குமாறு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## விபத்து பிரிவில் 412 பேர் அனுமதி

கடந்த 13, 14 ஆம் திகதிகளில் சுமார் 412 பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அவர்களில் 6 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளையில் உயிரிழந்த நிலையில் இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். இந்த விபத்துகளில் பெரும்பாலானவை வீடுகளில் இடம்பெற்றவை எனவும், அவ்வாறு 110 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வீதி விபத்துகள் காரணமாக 94 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக டொக்டர் இந்திக ஜாகொட தெரிவித்துள்ளார்.

இதில் சுமார் 80 பேருக்கு பல்வேறு அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டியிருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும், இவ்வருடம் பட்டாசு விபத்துகள் காரணமாக அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக குறிப்பிட்ட அவர், ஏப்ரல் 13, 14 ஆகிய 2 நாட்களிலும் 2 பேர் மாத்திரமே இது தொடர்பில் அனுமதிக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர்கள் இருவருக்கு பாரிய ஆபத்துகள் எதுவும் இல்லை எனக் குறிப்பிட்ட அவர், இது ஒரு சிறந்த சூழ்நிலை எனவும் மேலும் கவனமாக இருந்தால், இவ்வாறான விபத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும் என்பதை இந்நிலைமை எடுத்துக காட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 24 மணி நேரத்தில் பல்வேறு விபத்துகள் காரணமாக, 80 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் 30 பேர் வாகன விபத்துகள் காரணமாக காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பட்டாசு உள்ளிட்ட பல்வேறு விபத்துகள் காரணமாக ஏனையோர் இவ்வாறு வைத்தியசலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## சிறப்பு ரயில் சேவைகள்

இந்த சிறப்பு சேவைகள் எதிர்வரும் 21 வரை தொடரும் என்றும் வழக்கமான தினசரி ரயில் அட்டவணைகளுக்கு கூடுதலாக இயக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில், புனித தந்த தாது (சிறி தலதா தேக்மா) கண்காட்சி நடைபெறுவதை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை (18) முதல் கொழும்புக்கும் கண்டிக்கும் இடையே எட்டு சிறப்பு ரயில்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கூடுதலாக, கண்காட்சி காலத்தில் கம்பளை, கடுகன்னாவ மற்றும் கட்டுகஸ்தோட்டை இடையே இயக்க பல ரயில் சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பயணிகளின் தேவைக்கேற்ப இந்த சேவைகள் சரிசெய்யப்படும்.

## எண்ணெய் பூசும் நிகழ்வு...



தமிழ் – சிங்கள புத்தாண்டுடன் இணைந்து நடத்தப்படும் எண்ணெய் தேய்க்கும் நிகழ்வு புதன்கிழமை (16) அன்று நாட்டின் பல பிரதேசங்களில் சிறப்பாக இடம்பெற்றதுடன், கொலன்னாவ புராண ராஜமஹா விஹாரையில் பிரதமர் ஹரிணி அமரசூரியவின் பங்கேற்புடன் நடைபெற்றது.













### இல்லத்தரசிகளால் உப்பு, புளி

# ருசி பார்க்க முடியவில்லை

■ ஏ.எச்.ஏ.ஹூஸைன்

சமீபத்தில் சில நாட்களாக தங்களால் சமையலில் உப்பு, புளி ருசி பார்க்க முடியவில்லை என்று இல்லத்தரசிகள் முகம் சுழிக்கின்றனர்.

உப்புப் புளி தட்டுப்பாட்டால் அடுக்களைச் சமையல் கசந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் தற்போது உப்பு, புளியம்பழம் ஆகிய சுவையூட்டிகளுக்கு கடும் தட்டுப்பாடும் கிராக்கியும் காணப்படுவதால் இல்லத்தரசிகளால் சமையலில் உப்பு, புளி ருசி பார்க்க முடியவில்லை. இவ்விரண்டு சுவையூட்டிக்கான விலையும் எகிறியுள்ளது.

50 கிராம் புளியம்பழம் 100 ரூபாவுக்கு இரகசியமாக விற்கப்படுகிறது. அதேபோல கடைகளில் கல் உப்பு பெற முடியாத நிலை உள்ளது. கைவசம் இருக்கும் தூள் உப்பைக் கடைக்காரர்கள் அதன் வழமையான வாடிக்கையாளர்களுக்கு மாத்திரம் இரகசியமாக விற்பனை செய்கிறார்கள்.

தூள் உப்பை இரகசியமாக வழங்கும்போது



இந்த உப்பை மருந்து போல பயன்படுத்துங்கள் என்று கடைக்காரர்கள் வாடிக்கையாளர்களுக்கு அறிவுரை வழங்குவதையும் காணக்கூடியதாகவுள்ளது. சதோச விற்பனை நிலையங்களிலும் உப்பு, புளியம்பழம் என்பன விற்பனைக்கு இல்லை.

இதேவேளை, சித்திரைப் புத்தாண்டு காலத்தில் சுமார் ஏழு இலட்சத்திற்கு மேற்பட்ட அஸ்வெசும பயனாளிகளுக்கு சதோச விற்பனை நிலையங்களினூடாக 5000 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதியைச் சலுகை விலையில் 2,500 ரூபாவுக்குப் பெற்றுக் கொள்ளலாம் என்று அரசாங்கம் அறிவித்திருந்த போதிலும் அத்தகைய பொதிகள் எதுவும் இதுவரை விற்பனை செய்யப்படவில்லை.

கடந்த ஏழாம் திகதி தொடக்கம் நாட்டிலுள்ள அனைத்து சதோச நிலையங்களிலும் இந்த 5,000 ரூபாய் பெறுமதியான சலுகை உலருணவுப் பொதிகளை 2500 ரூபாவுக்குப் பெற்றுக் கொள்ளலாம் என்று அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. அரச ஊடகங்களும் இந்தச் செய்தியைத் திரும்பத் திரும்ப அறிவித்து வந்தன. ஆனால், உள்ளூரதிகாரசபை தேர்தல் தொடர்பான பிரகடனத்தால் இத்தகைய புத்தாண்டு சலுகை உலருணவுப் பொதி விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கெனவே, விநியோகிப்பதற்காக நாடெங்கிலுமுள்ள சதோச விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பொதிகள் மீளப் பெறப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.



# மாபெரும் பட்டத் திருவிழா

■ அபு அலா


தமிழ்-சிங்கள சித்திரைப் புத்தாண்டையொட்டி மட்டக்களப்பு மாநகர சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட பட்டத் திருவிழா செவ்வாய்க்கிழமை (15) அன்று கல்லடி கடற்கரையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு - மாநகர சபை ஆணையாளர் நா.தனஞ்ஜெயன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பணப் பரிசுகள் வழங்கி வைத்தார்.

இப் போட்டியில் முதலாம் இடத்தை பெற்ற களுதாவளையைச் சேர்ந்த கலா ரூபன் குழுவினர் 100,000 ரூபாயையும், இரண்டாம் இடத்தைப் பெற்ற கலாசார பண்பாட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த எஸ்.ரூபேசன் மற்றும் அவரது குழுவினர் 50,000 ரூபாயையும்,

மூன்றாம் இடத்தைப் பெற்ற





ஆரையம்பதியைச் சேர்ந்த எஸ். குலேந்திரன் மற்றும் ரகு குழுவினர் 25,000 ரூபாய் பணப்பரிசுகளையும் பெற்றுக்கொண்டனர்.

## 'வேலோடுமலை வேலவன்' வெளியீட்டு விழா

■ வி.ரி.சகாதேவராஜா

'சித்தர்களின் குரல்' ஏற்பாட்டில் 'வேலோடுமலை வேலவன் இசை பாடல்' வெளியீட்டு விழா பங்குனி உத்தர தீர்த்த திருவிழாவன்று ஆலய ஆதீனகர்த்தா எஸ். தியாகராஜா சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.

வேலோடு மலையில் சித்தர்களின் குரல் அமைப்பின் ஸ்தாபகர் சிவசங்கர் ஜீ.நமசிவாய மகேஸ்வரன் சுவாமி, தலைவர் ஆதித்தன் மற்றும் துணைத்தலைவர் மனோகரன் முன்னிலையில் இந் நிகழ்வு நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணம் திலக்சன் பாடலை அருமையாக அமைத்துள்ளார்.



பாடலை யாத்த மற்றும் பாடிய மூவரும் ஆலயம் சார்பிலும் சித்தர்கள் குரல் சார்பிலும் பொன்னாடை போர்த்திப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

## உயிரிழந்த நிலையில் சிறுத்தை மீட்பு

■ பி.கேதீஸ்

தலவாக்கலை - லிந்துலை, மட்டுக்கலை தோட்டத்திலுள்ள காய்கறி தோட்டத்திற்கு அருகாமையில் சிறுத்தை ஒன்று கம்பி வலையில் சிக்கி உயிரிழந்துள்ளதாக ரந்தெனிகல கால்நடை பிரிவின் கால்நடை வைத்தியர் அகலங்க பினிடிய தெரிவித்துள்ளார்.

பன்றி போன்ற விலங்குகளைப் பிடிக்க அமைக்கப்பட்டிருந்த கம்பி வலையில் சிக்கி உயிரிழந்த சிறுத்தை திங்கட்கிழமை (14) அன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நன்கு வளர்ந்த ஆண் சிறுத்தை என கால்நடை வைத்தியர் அகலங்க பினிடிய தெரிவித்துள்ளதுடன், இறந்த சிறுத்தையின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக ரந்தெனிகல கால்நடை மருத்துவ பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிறுத்தை மற்றும் புலிகளின் இறப்புகளைக் குறைப்பதற்காக வனவிலங்கு அதிகாரிகள் மேற்கொண்ட பல்வேறு திட்டங்கள் காரணமாக, 2024 ஆம் ஆண்டில் நுவரெலியா ஹக்கல வனவிலங்குப் பிரிவிலிருந்து எந்த



ஒரு சிறுத்தை, புலிகளின் இறப்பும் பதிவாகவில்லை என்றும், ஆனால் இந்த ஆண்டு இதுவரை இந்தப் பகுதியிலிருந்து மாத்திரம் மூன்று சிறுத்தை, புலிகளின் இறப்புகள் பதிவாகியுள்ளதாகவும் வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

2024 ஆம் ஆண்டில் நாட்டில் 14 சிறுத்தை மற்றும் புலிகளின் இறப்புகள் பதிவாகியுள்ளதாகவும், இந்த ஆண்டின் கடந்த சில மாதங்களில் மட்டும் ஆறு சிறுத்தைப் புலிகளின் இறப்புகள் பதிவாகியுள்ளதாகவும் வனவிலங்கு அதிகாரிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

### அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு

# தொழிற்துறை பாராட்டு

அமெரிக்காவால் அண்மையில் விதிக்கப்பட்ட சுங்கவரி காரணமாக, நமது நாட்டின் ஏற்றுமதித் துறைக்கு ஏற்படக்கூடிய தாக்கத்தை மதிப்பிடுவதற்கும், அத்தாக்கத்தைக் குறைப்பதற்கும், இலங்கை அரசாங்கம் மற்றும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மேற்கொண்ட உடனடி நடவடிக்கைகள் குறித்து, ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவால் இந்த வரிக் கட்டணங்கள் விதிக்கப்பட்டதிலிருந்து, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்கள் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்திற்குத் தலைமை தாங்கியுள்ளதுடன், அமெரிக்க வணிக பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து, இலங்கை அரசால் வழங்கப்படக்கூடிய சலுகைகள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்க்கு உத்தியோகபூர்வமாக தகவல் அளிக்கும் வகையில் நடவடிக்கை எடுத்து, ஏற்றுமதித் துறையைப் பாதுகாப்பதற்கான தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இதனை ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் தனது அறிக்கையில் பாராட்டியுள்ளது. இந்த துரித நடவடிக்கைகளின் விளைவாக, அமெரிக்காவால் அண்மையில் விதிக்கப்பட்ட வரிக் கட்டணங்கள் 90 நாட்களுக்கு நிறுத்திவைக்கப்படும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்க்கப்படும் எனவும், இந்த முடிவு ஏற்றுமதித் துறையின் நிலைத்தன்மைக்கும் நம்பகத்தன்மைக்கும் வழிவகுக்கும் எனவும் ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் வலியுறுத்தியுள்ளது.

அரசாங்கம் மேற்கொண்ட இந்த அவசர மற்றும் விரைவான நடவடிக்கைகளின் மூலம், இலங்கையின் ஏற்றுமதித் துறையின் லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தையும், இத்துறையின் நிலைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையையும் பாதுகாக்கும் அரசாங்கத்தின் அளவிட முடியாத அர்ப்பணிப்பு வலுவாகப் பிரதிபலிக்கப்படுகிறது.

தற்போதைய 90 நாள் வரிக் கட்டண இடைநிறுத்தத்திற்குப் பிறகு எடுக்கக்கூடிய நிலையான நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க அரசாங்கத்துடன் பரஸ்பர நன்மை பயக்கும் நீண்டகால வர்த்தக ஒப்பந்தத்தை நோக்கி நகர அரசாங்கம் எடுத்த விரைவான நடவடிக்கைகளைத் தொடர்வது முக்கியம் என்பதை ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் வலியுறுத்துகிறது.



# கம்பஹா துப்பாக்கிச் சூடு தொடர்பில் விசாரணை

கம்பஹா நகரில் உள்ள பேருந்து நிலையத்திற்கு அருகில் செவ்வாய்க்கிழமை (15) இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிளில் வந்த 2 நபர்கள், சிறிய லொரி ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு நடந்த நேரத்தில் சிறிய லொறியில் பயணித்த 2 பேர் வாகனத்தில் இருந்து இறங்கி அருகிலுள்ள கடைக்குள் ஓடியுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் அவர்களுக்குக் காயம் ஏற்படவில்லை என்றும், லொறிக்கு மட்டுமே சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தப்பிச் சென்ற சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காக கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அதிகமாக தண்ணீர் பருகுமாறு அறிவுறுத்தல்

தமிழ்-சிங்கள புத்தாண்டு காலபகுதியில் வெளுத்து வாங்கிய மழை அப்படியே குறைந்து. நாட்டின் பல பாகங்களிலும் கடுமையான வெப்ப காலநிலை நிலவுகிறது.

இந்த நாட்களில் நாட்டின் பல பகுதிகளில் அதிக வெப்பம் நிலவும் என்பதால், கவனம் செலுத்துமாறும் அதிகளவில் தண்ணீரைப் பருகுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொள்கிறது.

குறிப்பாக வடக்கு, வடமத்திய, வடமேற்கு, கிழக்கு, ஊவா மாகாணங்களிலும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் இந்த உயர் வெப்பநிலை அதிகமாக இருப்பதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

மனித உடலை நீண்ட நேரம் வெப்பத்தில் வெளிப்படுத்துவது நீரிழப்பு, தசைச் சிதைவு, அதிகப்படியான சோர்வு மற்றும் பக்கவாதத்திற்கு வழிவகுக்கும் என்றும், வயதானவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் இது குறித்து மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்றும் துறை அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதுபோன்ற கடுமையான வெப்பநிலை தொடர்ந்தால், பொதுமக்கள் அதிக அளவு தண்ணீர் குடிக்கவும், கடுமையான செயல்பாடுகளைக் குறைக்கவும், நிழலான பகுதிகளில் தங்கவும் திணைக்களம் அறிவுறுத்துகிறது.

பம்பரமாக சுற்றித்திரியும் ஒவ்வொருவரின் வாழ்க்கையைச் சுறுசுறுப்பாக மாற்றுவதற்குத் தண்ணீர் இன்றியமையாதது. 2 நாட்கள் கூட உணவில் இல்லாமல் இருந்து விடலாம். ஆனால் ஒரு நாள், ஒரு மணி நேரத்திற்குக் கூட தண்ணீர் கூட இல்லாமல் இருக்க முடியாது. இப்படி உடல் நலத்தைப் பாதுகாப்புடன் வைத்திருக்கத் தண்ணீர் குடிப்பது அவசியம். அதிலும் வெறும் வயிற்றில் தண்ணீர் குடிப்பதால் உடலுக்கு ஏராளமான நன்மைகள் பெற முடியும்

அதிகாலையில் தூங்கி எழுந்தவுடன் பல் துலக்கி விட்டு, ஒரு செம்பு தண்ணீர் முழுவதுமாக குடிக்க வேண்டும். தூங்கி எழுந்தவுடன் உடல் சோர்வாக இருக்கும் என்பதால் அதை சுறுசுறுப்பாக மாற்றுவதற்கு தண்ணீர் உதவியாக இருக்கும். ஆம்! உடலில் நீர்ச்சத்துக்கள் குறைவாக இருந்தால் சோம்பல் மற்றும் தலைவலி ஏற்படும். இதைத் தவிர்ப்பதற்கும், உடலை எப்போதும் சுறுசுறுப்பாகவும், நீரேற்றமாகவும் வைத்திருக்கக் காலையில் வெறும் வயிற்றில் தண்ணீர் குடிக்கலாம்.

ஆனால், அதிகப்படியான தண்ணீரைக் குடிப்பது, அதிகப்படியான நீரேற்றம் அல்லது நீர் போதை என்றும் அழைக்கப்படுகிறது. இது பல உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

அதிகப்படியான தண்ணீரை உட்கொள்வது இரத்தத்தில் உள்ள சோடியத்தின் அளவை நீர்த்துப்போகச் செய்து, ஹைபோநெட்ரீமியா எனப்படும் நிலைக்கு வழிவகுக்கும். இது உடலின் செல்கள் வீங்கி, தலைவலி, குமட்டல், வாந்தி, குழப்பம், வலிப்பு மற்றும் கடுமையான சந்தர்ப்பங்களில் கோமா அல்லது இறப்பு போன்ற அறிகுறிகளுக்கு வழிவகுக்கும்.

எனினும், அதிகப்படியான தண்ணீரை அருந்தும்போது அதை வெளியேற்றுவதற்கு சிறுநீரகங்கள் கடினமாக உழைக்க வேண்டும். இது அவற்றைக் கஷ்டப்படுத்தி, காலப்போக்கில் சிறுநீரக பாதிப்புக்கு வழிவகுக்கும்.

அதிகப்படியான தண்ணீர் குடிப்பது உடலில் உள்ள எலக்ட்ரோலைட்டுகளின் சமநிலையை சீர்குலைக்கும். இது தசை செயல்பாடு, நரம்பு சமிக்ஞை மற்றும் பிற முக்கியமான உடல் செயல்பாடுகளுக்கு அவசியம்.

அதிகப்படியான நீர் நுகர்வு அடிக்கடி சிறுநீர் கழிக்க வழிவகுக்கும். இது சிரமத்தையும், இடையூறையும் விளைவிக்கும். குறிப்பாக, இரவில் அடிக்கடி எழுவதால் தூக்கத்திற்குத் தொல்லை தருவதாய் அமைந்து தூக்கப் பிரச்சினைக்கு வழிவகுக்கும். அதனால் மறுநாள் பகல் நேரத்தில் வேலைகளைச் சரிவரச் செய்ய முடியாது. தூக்கக் கலக்கத்திற்கு வழிவகுக்கும். சோர்வு மற்றும் சோம்பலை ஏற்படுத்தும் என்பதையும் நினைவில் கொள்க.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

சிந்தனை ஓட்டங்கள் விஸ்தீரணம் அடையும்போது, அதனோடு இணைந்தவர்கள் பரோபகாரிகளாகி விடுகின்றனர். இது இயல்பான நிலைதான்.

நற்சிந்தனையுடன் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் நலன்பற்றி, அக்றை கொண்டால், அதுவே, அவர்களின் பரந்த நற்பண்பைத் தானாகவே மாற்றி விடுகின்றது.

எவராலுமே சிறப்பான வாழ்வை உருவாக்க முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் பலவித பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவருமே துன்பங்களை விரும்புவதில்லை. எனினும், இன்பங்களும் துன்பங்களும் வந்து போன வண்ணமே உள்ளன.

வாழ்க்கை என்பது அற்புதமான தேன்கூடு. பல்லாயிரம் தேனீக்கள், பலகோடி மலர்களிலிருந்து, தேனைச் சேகரிக்கின்றன. உழைப்பின் முழு வடிவத்தையும் இந்தச் செயற்பாடு உருவகிக்கின்றது. தேனீக்களின் இந்தத் தொண்டுக்கு, நிகர் பிறிதொன்றுமில்லை.இதேபோலவே, மனித இனம், தன்னை வளப்படுத்தப் போராடிக்கொண்டே இருக்கின்றது. இந்தப் போராட்டத்தை, ஆதரிக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும்.

எனவே, சிந்தனையாளர்கள் மனித இனத்தின் மீது அக்கறை செலுத்துவதும். அறிவுரை சொல்வதும் அவர்களது கடமையாகிவிட்டன. மக்களின் பிரதிநிதிகள் இவர்களாவர்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதியை சீர் செய்யுங்கள்

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட காட்மோர் பிரதான வீதி, சுமார் 3 கி.மீ. தூரம் வரை மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுவதால் அப்பகுதி மக்கள் மற்றும் வாகன சாரதிகள் போக்குவரத்தின் போது பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

மோக்கா பாடசாலை முதல் காட்மோர் சந்தி வரையான மூன்று கி.மீ. தூரத்தை பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம் (TRUST) பொறுப்பேற்று மொக்கா தோட்ட காரியாலயம் வரை மட்டும் செப்பனிட்டுள்ளதுடன் மிகுதியைச் செப்பனிடப் படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இதனால் கர்ப்பிணி தாய்மார்கள், நோயாளிகள், பாடசாலை மாணவர்கள், சாரதிகள் மற்றும் காட்மோர் பகுதியில் பிரசித்தி பெற்ற நீர் வீழ்ச்சியைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தினமும் நூற்றுக்கணக்கில் வருகை தரும் பயணிகள் தமது சொகுசு வாகனங்களை இடைநடுவில் நிறுத்தி விட்டு நடந்து செல்ல வேண்டி உள்ளதாகவும் இவ்வாறு நிறுத்தி வைக்கப்படும் வாகனத்தில் உள்ள சில முக்கிய பொருட்கள் களவாடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து சம்பந்தமாகச் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்தித் தீர்வை பெற்றுத் தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– செ.தி.பெருமாள்



# முரண்பாடுகளை அதிகரித்த மோடியின் வருகை

முருகானந்தம் தவம்

தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. அதன் ஆரம்பத்தில் இருந்தே இந்திய எதிர்ப்புணர்வில் உறுதியாகவிருந்ததுடன் சீனாவுக்கு ஆதரவான ஒரு அரசியல் கட்சியாகவே செயற்பட்டது. அது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்ததுடன், அதன் அப்போதைய தலைவர் ரோஹன விஜேவீர தலைமையில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து தென்னிலங்கையில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டது. அனுரகுமார திசாநாயக்க உட்பட ஜே.வி.பியின் இன்றைய முன்னணி தலைவர்களில் பலர் இந்திய எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஜே.வி.பியில் இணைந்தவர்களாகவேயுள்ளனர்.

இலங்கையின் வடக்குக்கு 'அமைதி காக்கும் படையை' அனுப்பி வைக்க கைச்சாத்திடப்பட்ட 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்த ஜே.வி.பி., இந்தியா, இலங்கையைப் பிரிக்கத் திட்டமிடுவதாகக் கூறி அதற்கு எதிராக ஆயுத கிளர்ச்சி மற்றும் படுகொலை வன்முறைகளை முன்னெடுத்தது. வேலையற்ற கிராமப்புற இளைஞர்கள் மத்தியில் இந்தியாவுக்கு எதிராக ஒரு பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டது இதன் விளைவாக சுமார் 60,000 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த 37 வருடங்களுக்கு முன்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கொண்டு வரப்பட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி மீது, இராணுவ அணிவகுப்பு மரியாதையில் விஜயமுனி என்ற கடற்படை அதிகாரி தாக்க முற்பட்ட சம்பவம் பதிவாகி இருந்தது. இந்த நிலையில், குறித்த நபர் ஜே.வி.பி. பின்னணியைச் சேர்ந்தவர் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இத்தாக்குதலில் கற்றுக்கொண்ட பாடத்தின் அடிப்படையிலேயே அண்மையில் இலங்கை வந்த இந்தியப் பிரதமர் மோடிக்கான இராணுவ அணி வகுப்பு மரியாதையில் மோடியின் பாதுகாப்பு பிரிவினர் முன்னெச்சரிக்கையாக அணிவகுப்பு மரியாதையை ஏற்ற மோடிக்குப் பாதுகாப்பை வழங்கினர்.

அப்போது, நாட்டில் ஜே.வி.பியின் படுகொலைகள், வன்முறைகள் உச்சம் தொட்ட நிலையில், ஜனாதிபதியாக பிரேமதாச பதவியேற்ற பின்னர், இரும்புக் கரம் கொண்டு ஜே.வி.பி. அடக்கப்பட்டது. இதன் பின்னர் ஜே.வி.பி. தலைமைத்துவம் 1994இல் மீண்டும் தலைதூக்கி, ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவினரின் ஆதரவுடன், அதன் சோசலிச கொள்கைகளைப் பெருமளவில் கைவிட்டு விட்டு, தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தை ஆதரித்ததுடன், போருக்கான அதன் ஆதரவு மற்றும் பல்வேறு முதலாளித்துவ அரசாங்கங்களில் அதன் பங்கேற்பு அல்லது அரசியல் ஆதரவளிப்பினால் செல்வாக்கு இழந்துபோன ஜே.வி.பி. 2015இல் தேசிய மக்கள் சக்தி என்ற கட்சியை ஸ்தாபித்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் எதிர்கொண்டு வெற்றி பெற்று இன்று ஆட்சியாளர்களாகியுள்ளனர்.

ஆட்சி பீடம் ஏறுவதற்கு முன்னர் இருந்த ஜே.வி.பி. - என்.பி.பி. ஆகியவற்றின் கொள்கைகளும் பிரசாரங்களும் கொடுத்த வாக்குறுதிகளும் ஆட்சி பீடமேறிய பின்னர் ஒட்டுமொத்தமாக மாறியதே இன்று இவர்கள் கடுமையாக விமர்சிக்கப்படுவதற்கும் இவர்களின் ஆதரவாளர்கள் விசனப்படுவதற்கும் காரணமாகியுள்ளது. அதிலும், இந்தியாவின் எதிர்ப்புணர்வாளர்களாகவே தம்மை இறுதிவரை காட்டி வந்த இவர்கள், இன்று இந்தியா மீது கொண்டுள்ள காதல் இவர்களின் கொள்கை. இரட்டைவேடம் தொடர்பிலான பல்வேறு கேள்விகளையும் எழுப்பியுள்ளது. இதுவே ஜே.வி.பியில் இன்றுமுள்ள சில தீவிர இந்திய எதிர்ப்புணர்வாளர்களினால் ஜே.வி.பி.- என்.பி.பி. கட்சிகளிடையில் பிளவுகளும் முறுகல்களும் ஏற்பட்டுள்ளதை அண்மைய இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கைக்கான விஜயம் அம்பலப்படுத்தியுள்ளது. மக்கள் விடுலை முன்னணி (ஜே.வி.பி.)- தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி.) ஆகியவற்றின் தலைவரான ஜனாதிபதி அனுரகுமார, தான் ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் தனது முதல் உத்தியோகபூர்வ பயணமாக இந்தியாவுக்குச் சென்றமை ஜே.வி.பி. - என்.பி.பிக்கிடையில் முதலில் புகைச்சலை ஏற்படுத்தியது.

ஜனாதிபதி அனுரகுமார தனது முதல் விஜயமாக சீனாவுக்குச் செல்ல வேண்டுமென விரும்பியபோதும், அயல்நாடு என்றவகையில் இந்தியாவுக்கு முதலில் செல்ல அனுரகுமாரவுக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டதுடன், அதற்கான அழுத்தமும் இந்தியாவினால் கொடுக்கப்பட்டது. ஜனாதிபதி அனுரகுமாரவின் இந்த இந்திய விஜயம் தொடர்பில் ஜே.வி.பிக்குள் எதிர்ப்பலைகள் எழுந்ததுடன், நாட்டிலும் அனுரகுமார அரசுக்கு எதிரான விமர்சனங்கள், விசனங்கள் கிண்டல்கள் வெளிவரத் தொடங்கிய நிலையில், அனுரகுமாரவின் இந்திய விஜயத்தையும் அவரது உயர்மட்ட கலந்துரையாடல்களையும் அவரது கட்சிக்குக் கிடைத்துள்ள சர்வதேச அங்கீகாரமாகத் தேசிய மக்கள் சக்தி வெளிக்காட்டி பிரசாரங்களை முன்னெடுத்தது.

அண்மையில் கொழும்பில் ஜனாதிபதி தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி, அதானியின் கொழும்பு மேற்கு துறைமுக அபிவிருத்தி ,திருகோணமலை துறைமுக மேம்பாடு குறித்தும் அதன் அறிவிப்பை இந்தியப் பிரதமர் வரும்போது வெளியிடலாமென்றும் இந்த கூட்டத்தில் பேசப்பட்டபோது, அவற்றையெல்லாம் நிராகரித்தார் ஜே.வி.பி அமைச்சர் ஒருவர்.

இந்தியாவுக்கு அனுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு விரும்பியோ விரும்பாமலோ கொடுக்கும் முக்கியத்துவம் வழக்கமாக சீனா ஆதரவுடன் இயங்கும் ஜே.வி.பியின் இடதுசாரி அடையாளத்தை மெதுவாக இழக்க வைக்கத் தொடங்கியிருக்கின்றது என்பது ஜே.வி.பியில் உள்ள இந்திய எதிர்ப்புணர்வாளர்களை சினமடைய வைத்துள்ள நிலையில்தான், அண்மைய இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கைக்கான விஜயம் ஜே.வி.பிக்குள் புகைந்து கொண்டிருந்த முறுகலை, பிளவுகளைத் தீவிரப்படுத்தி விட்டுள்ளது. இதன் வெளிப்பாடுகளாகவே இந்தியப் பிரதமர் மோடியை விமான நிலையத்தில் வரவேற்கும் நிகழ்வு, இராப்போசன விருந்துபசாரம் போன்றவற்றை ஜே.வி.பி.யை பிரதிநிதித்துவப்படுத்தும் சில முக்கிய அமைச்சர்கள் புறக்கணித்தனர். இன்று நாடொன்றின் பிரதமரையே கூடி நின்று வரவேற்க முடியாத நிலைமை ஜே.வி.பி.-என்.பி.பி. அரசுக்கு ஏற்பட்டுள்ளது. மோடியின் இந்த விஜயத்தின்போது, இலங்கை மற்றும் இந்தியா இடையே பல பாதுகாப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இலங்கைக்குப் புலனாய்வுத் தகவல் வழங்குவது, திருகோணமலையில் சக்திவாய்ந்த ராடர் ஒன்றை நிறுவுவது, இலங்கை கடல் படைக்குப் பயிற்சி, விமானப் படைக்குப் பயிற்சி மற்றும் விமானங்களை வழங்குவது என்று 15க்கும் மேற்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தங்கள் இந்தியா மற்றும் இலங்கை இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.இதனூடாக ஒட்டு மொத்தத்தில் மோடி, இலங்கையை வளைத்து கைக்குள் போட்டுள்ளார். சீனாவின் ஆதிக்கத்தை இலங்கையில் குறைப்பதற்கான முழு நடவடிக்கையில் இறங்கிய மோடிக்கு இது பெரும் வெற்றி அளித்துள்ளது.இதுவே ஜே.வி.பியிலுள்ள இந்திய எதிர்ப்புணர்வாளர்களை இந்தியப் பிரதமரிற்கான வரவேற்பை, சந்திப்பை, இராப்போசன விருந்தை புறக்கணிக்க வைத்தது.


கொழும்பு பாதுகாப்பு மாநாடு மற்றும் இந்தியப் பெருங்கடலில் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவற்றில் இணைந்து பணியாற்றவும் நாங்கள் ஒப்புக்கொண்டுள்ளோம். இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக ஒரு சர்ச்சை உள்ளது. கவலைப்பட ஒன்றுமில்லை. பிராந்திய பாதுகாப்பை நாம் நிறுவ வேண்டும். மேம்பட்ட மற்றும் திறமையானவர்களின் உதவியைப் பெற வேண்டும். இல்லையெனில், நாம் முன்னேற முடியாது என்றும் அனுரகுமார கூறியுள்ளார்.

எமது அயல் நாட்டின் தலைவர் மோடி நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பல்வேறு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுச் சென்றுள்ளார்.ஆனால், எதிர்க்கட்சியினர் சர்வதேசத்துக்கு நாட்டை அரசு காட்டிக்கொடுப்பதாக தற்போது குற்றஞ்சாட்டுகின்றார்கள். அரசு நாட்டை காட்டிக் கொடுக்கவில்லை. அவர்கள் காட்டிக்கொடுத்தவற்றை நாமே நிறுத்தியுள்ளோம். ரணில், மில்கோ நிறுவனத்தை இந்தியாவின் தனியார் நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்வதற்குத் தயாராக இருந்தார். ஆனால், நாம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அந்த ஒப்பந்தத்தை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தோம். அதேபோன்று மஹவ - ஓமந்தை ரயில் பாதை மற்றும் மஹவ - அனுராதபுரம் ரயில் பாதை சமிக்ஞை கட்டமைப்பு ஆரம்பத்தில் இந்தியாவின் கடன் உதவி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஆனால், ஜனாதிபதி அனுரகுமார, இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, இந்தியப் பிரதமர் இந்தத் திட்டங்களை அன்பளிப்பாக வழங்குவதாகக் குறிப்பிட்டார்.

அதேபோன்று இந்தியாவிடம் இருந்து நாம் கடன்களைப் பெற்றுக்கொண்டுள்ளோம். தற்போது இந்தக் கடனுக்கான வட்டியைக் குறைப்பதாக இந்தியப் பிரதமர் மோடி எமக்கு வாக்குறுதி அளித்துள்ளார். எதிர்க்கட்சியினர் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை முறியடித்து நாம் சர்வதேசத்தின் முழு ஒத்துழைப்புடன் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்பதை நிரூபித்துள்ளோம். எனவே, எமது அரசை எந்தச் சதி முயற்சியாலும் கவிழ்க்கவே முடியாது என்று ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளரும் தே.ம.ச.யின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான ரில்வின் சில்வா வும் இந்தியாவுடனான காதலை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஆகவே, இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கைக்கான விஜயம் ஜே.வி.பி.-என்.பி.பி. அரசில் முரண்பாடுகளையும் பிளவுகளை ஏற்படுத்திவிட்டுள்ளதுடன் அதனை வெளியுலகத்திற்கும் வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது. ஜே.வி.பி.-என்.பி.பி. அரசு ஏற்கனவே பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளும் சிக்கித்தவித்து வரும் நிலையில் தற்போதைய இந்தியப்பிரதமரின் இலங்கை விஜயத்திற்கும் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்கும் ஜே.வி.பியினரின் உள்ளம் கவர்ந்த சீன அரசு காட்டப்போகும் பிரதிபலிப்புக்கள் இலங்கையில் இந்திய-சீன தலையீடுகளின் நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தவே போகின்றன.

அனுரகுமார, தான் ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன், முதல் நாடாக இந்தியாவுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயம் இலங்கையில் ஏற்படுத்திய அதிர்வலைகளை விடவும் கடந்த 4ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் ஜே.வி.பி.-என்.பி.பி. அரசு மீது அதிக எதிர்ப்பலைகளையும் விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளதுடன் இந்தியாவுக்கு எதிரான ஜே.வி.பியின் கொள்கை தொடர்பிலான கேள்விகளையும் எழுப்பியுள்ளது. அதுமட்டுமன்றி, ஜே.வி.பி.-என்.பி.பி. கட்சிகளுக்குள் முரண்பாடுகளையும் பிளவுகளையும் அதிகரித்துள்ளது.



# கிலி(ழி)

தமிழுராள் அனுஷ்திக்கா,
மருதநகர்,
வாழைச்சேனை.

கடகடவென்று உள்ளே வந்த சைந்தவி தட்டில் இரண்டு மணி நேரமாய் காத்திருந்த மஞ்சள் சோறையும், இறை ச்சிக் குழம்பையும் சற்றும் ருசி பார்க்காமல் வாய்க்குள் புகுத்தும் போது, "ஏய் பொதுக்காத சாப்பாட்டு தொண்டையில அடைச்சிற போகுது மெல்ல சாப்பிடன் டி, கதிரையில முள்ளா வச்சிருக்கு இருந்துதான் சாப்பிட்டா என்னவாகப் போகுது..?" என்று பக்கத்து வீட்டு கமலா அக்கா வீட்ட போய் வந்த அம்மா கிடுகிடுன்னு கத்தினாள்...

"இல்லம்மா இப்ப மீட்டிங் ஒன்டுக்கு கட்டாயம் போகனும் இப்போ தொடங்கிருக்கும் போல எனக்காகத்தான் காத்திருக்காங்கலாம் அதான் கெதியா போகனும்..." என்று சித்திரை மாத பனீஸ் சாப்பிடும் போட்டி போல சாப்பிட்டு, தட்டை அலம்பிவைத்து விட்டு டம்லரில் தண்ணீரை ஊற்றி நடந்துகொண்டே வாய்க்குழாக்குள் அனுப்பினாள்.

"எப்பப் பாரு கல்லெறிஞ்ச நாய் போலஅவதியோடயே திரி" ஆளும் மண்டையும்.." வாய்க்குள் முணு முணுத்த அம்மா சந்திராவின் கதையை கூட காது கொடுக்காது," இந்தா வாரன் சேர்.. அஞ்சி நிமிசத்தால அங்க இருப்பன்.." என்று காதில் தொலைபேசியை வைத்து பேசியபடியே வண்டியைத் தள்ளினாள்.

"என்ன மீட்டிங்? எவடத்த போறா..?"என்றதுக்கு"இந்தா கிட்டதான் போறன்'உதவி'என்ற அமைப்பில கொஞ்சம் கஸ்டப்படுறப் பிள்ளைகளுக்கு உதவி செய்யதான், இருட்டுப்படுறதுக்குள்ள வந்துடுவன்" என்று கூறியபடி, அம்மாவின் பதிலையும் கேட்காமல் முறுக்கிக்கொண்டு போய் விட்டாள் சைந்தவி.

அனுப்பிய வழியே பார்த்து நின்று இதுக்குப் பிறகு கமலா வீட்ட போகனுமா? வேணாமா? என்ற யோசனைக்கு பிறகு அப்படியே தன் வீட்டு சட்டிபானைகளை கழுவத் தொடங்கினாள்.

வானம் தன் நீலப்புடவை நீக்கி கறுப்புபுடவை அணியத் தொடங்கியநேரம். பறவைகள் எல்லாம் பள்ளிக்கூட பிள்ளைகள் போல கூட்டாளித்தனத்தை வெளிக்காட்டும் அழகிய காட்சி. கோழிகள் நடந்து போட்ட கோலங்கள் மின்குமிழ் வெளிச்சத்தில் நவீன ஓவியமாய்த் தெரிந்த வண்ணம். பூக்கள் தலைகவிழ்ந்து ஆழ்ந்த உறக்கத்திற்கு போகும் நிலை. அது வரை பகலில் மறைந்திருக்கும் நிலாவினை இந்த உலகக் கவிஞர்கள் கொண்டாடத் தொடங்கும் தருணம். அந்தகும்மிருட்டு குவியும் நேரத்தில் தன் பருவகால நினைவுகளை மீட்டிப் பார்த்திருக்கையில், தொலைப்பேசி அழைப்பொன்று,

"இதொன்ற யாரு கண்டுபிடிச்சிருக்கானுகளோ தெரியல. பெருத்த அரியண்ட மொன்டு... யாரெடுக்காவோ....?அய்யோ சைந்தவியோ..? என்று அவசர அவசரமாக செல்போனை எடுத்து யாரென்று கேட்காமல் எங்கபுள்ள? எங்க இருக்கா? ஒரு போன் எடுக்க மாட்டியா?.." என்று அடுக்கடுக்காய் கேள்விக்கணைகளைத் தொடுக்கையில், "அய்யோ அக்காநான் மகள் இல்ல குமுதினி என்ற சொன்னதும் "ஐயோ மன்னிச்சுறு குமுதினி சொல்லு" என்றதும் "அக்கா மகள் இப்ப தான் வீட்ட வந்தவள் கொஞ்ச நேரத்தால வீட்ட வந்திடுவா, மகளுக்கு ரொம்ப நன்றி சொன்னேன் என்று சொல்லு அக்கா. புள்ள சொல்லிதான் என்ட மகளுக்கு படிக்க யாரோ உதவி செய்யுறாங்களாம். பெரிய உதவியொன்டு அக்கா. எங்க கஸ்டத்தால படிக்காம விட்டுடுவாளோன்னு நினைச்சிட்டு இருந்தன். உங்க புள்ளைட புண்ணியத்தால அந்த கவலை இனி இல்ல அக்கா" அந்த நேரத்தில், வாசலில் கோன் சத்தம். எட்டிப் பார்த்தால் சைந்தவிதான்.

மேகம் நிலாவினை அணைத்துக் கொண்டது.


இரவு சாப்பாடு சாப்பிட்டு முடித்த பின்னர், தன் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு போனை எடுத்து பார்த்தால் 20க்கு மேல் நண்பர்களிடமிருந்து அழைப்புக்குள் அதிர்வோடும் ஆச்சரியத்தோடும் பார்க்கின்ற போது, பிருந்தாவிடமிருந்து அழைப்பு. பரபரப்புடன் அழைப்பை எடுத்து காதில் வைத்தாள்.

அதுவரை சைந்தவின் முகம் எதிர்கொள்ளாத முகபாவனை. மூக்கிற்கும் வாய்க்கும் இடையே நீர்த்திவளைகள். கண்களில் அசைவில்லை. வார்த்தைகள் தொண்டையில் இருந்து நாவிற்கு கடத்தப்படவில்லை. அப்படியே போனை எடுத்து முகநூல் தளத்திற்கு போனாள். அப்போதிலிருந்து கண்களிலும் நீர்த்திவளைகள் கண்ணீராகி வழிந்தது. உடல் நடுக்கத்துடன் தன் அறைக்குள் சென்று கதைவடைத்துக் கொண்டாள்.

தவறான புகைப் படங்களுடன் சைந்தவியின் புகைப்படங்களை இணைத்து யாரோ தவறான பதிவுகளால் நிரப்பியுள்ளனர். "நான் இணைய விபசாரி" என்ற குறிப்புடன் இவளது புகைப்படங்கள் எடிட் செய்யப்பட்டும், இணைக்கப்பட்டும் பதிவிடப்பட்டுள்ளன. என்ன செய்வதென்று யோசிக்கக்கூட முடியாது அழுது கொண்டிருந்தாள். நண்பர்கள் யாரென்று தீவிர ஆராய்தல் வேலைகளில் இறங்கினர். இரவிரவாய் மாறி மாறி தொலைபேசி அழைப்புக்கள். "பொலிஸூக்கு போ டி", "பொலிசுக்கெல்லாம் போகாதடிவேற பிரச்சனையாகிடும்", "ஏய்புலக் பண்ணு","யாரோடையும் கடைசியா பிரச்சனைக்கு போனியா" இப்படி பல கதைகள். அடுத்த அறையிலிருக்கும் அம்மாவிற்கு தன் அழுகை கேட்டவும் கூடாது. இப்படி அழவும் முடியாமல் அழுகையை அடக்கவும் முடியாமல் அவள் அறைக்குள் இணையச்சிலுவையில் அறையப்பட்டாள்.

தனக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கும் நபரும், அவரது குடும்பமும் இதனை எப்படி எதிர்கொள்ளும்? அம்மாக்கு இது தெரிந்தால் எப்படித் தாங்குவாள்? நான் டியூசன் குடுக்கும் பிள்ளைகளிடம் எப்படி முழிப்பது? நாளைக்கு நான் வெளியில் சென்றால் என்னவாகும்? எனபுழுக்கள் நிறைந்தஅறைக்குள் கட்டிப்போடப்பட்டவள் போலகிடந்தாள்.


'நாளை என்ன ஆகும்? என்னை இந்த சமூகம் என்ன சொல்லும்?" "நான் இதுவரை கேட்ட நல்ல பெயர்கள் என்னவாகும்? பயத்தின் கரங்கள் அவள் கழுத்தை நெறிக்கத்துடித்தன. எல்லா நிறத்திலும் சால்வைகள் கட்டிலில் கிடந்தன. அந்த பயம் சால்வைகளாய் மாறாதிருக்க அவள் முயற்சித்தாள். முயற்சிக்கின்றாள் முயற்சிப்பாள்.



# சித்திரைப் புத்தாண்டு விசேட நிகழ்வுகள்

'விசுவாவசு' வருட தமிழ் சித்திரைப் புத்தாண்டு விசேட நிகழ்வுகள் மற்றும் பூஜை வழிபாடுகள் நட்டின் பல பிரதேசங்களில் திங்கட்கிழமை (14) அன்று வெகு விமர்சையாக நடைபெற்றது.

– தமிழ் மிரர் நிருபர்கள்







## திருகோணமலையில்...

























## மன்னாரில்...







## முல்லைத்தீவில்...






## நீர்கொழும்பில்...













சம்பியன்ஸ் லீக்:

# அரையிறுதியில் பார்சிலோனா



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா முன்னேறியுள்ளது.

ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்டை 5-3 என்ற மொத்த கோல் கணக்கில் காலிறுதிப் போட்டியில் வென்றே அரையிறுதிப் போட்டிக்கு பார்சிலோனா தகுதி பெற்றுள்ளது.

டொட்டமுண்டின் மைதானத்தில் புதன்கிழமை (16) அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் தோற்றபோதும், தமது மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் வென்ற நிலையிலேயே 5-3 என்ற மொத்த கோல் கணக்கில் பார்சிலோனா வென்றிருந்தது.

ஐ.பி.எல்:

## கொல்கத்தாவை வென்ற பஞ்சாப்



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), முல்லான்பூரில் செவ்வாய்க்கிழமை (15) நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான கொல்கத்தா நைட் றைடர்ஸுடனான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பஞ்சாப்

பஞ்சாப்: 111/10 (15.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: பிரப்சிம்ரன் சிங் 30 (15), பிரியன்ஷ் ஆர்யா 22 (12), ஷஷாங்க் சிங் 18 (17), ஸ்கேவியர் பார்ட்லெட் 11 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹர்ஷித் ரானா 3/25 [3], சுனில் நரைன் 2/14 [3], வருண் சக்கரவர்த்தி 2/21 [4], அன்றிச் நொர்கியா 1/23 [3])

கொல்கத்தா: 95/10 (15.1 ஓவ.) (துடுப்பாட்டம்: அங்கிரிஷ் ரகுவன்ஷி 37 (28), அன்ட்ரே ரஸல் 17 (11), அஜின்கியா ரஹானே 17 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: யுஸ்வேந்திர சஹால் 4/28 [4], மார்கோ ஜன்சன் 3/17 [3.1], கிளென் மக்ஸ்வெல் 1/15 [2], அர்ஷ்டீப் சிங் 1/11 [3])

போட்டியின் நாயகன்: யுஸ்வேந்திர சஹால்.

இந்நிலையில், மும்பையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத்தை மும்பை இந்தியன்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



## சோதனையில் நொர்கியா, நரைனின் துடுப்பு மட்டைகள் தோல்வி

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), பஞ்சாப் கிங்ஸுக்கெதிரான புதன்கிழமை (15) போட்டியின்போது கொல்கத்தா நைட் றைடர்ஸின் அன்றிச் நொர்கியா துடுப்புமட்டையை மாற்ற வேண்டியேற்பட்டுள்ளது.

போட்டி நடுவர்களால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது துடுப்புமட்டை தோல்வியடைந்துள்ளது.

இதேவேளை நை றைடர்ஸின் இனிங்ஸ் ஆரம்பிக்க முன்னர் சுனில் நரைனின் துடுப்புமட்டையும் தோல்வியடைந்தமை காணொளியொன்றில் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (13) முதலே களத்தில் துடுப்புமட்டைகளின் அளவுப்பிரமானங்களை நடுவர்கள் சோதிக்க ஆரம்பித்திருந்த நிலையில் இதுவே துடுப்பாட்டவீரர்கள் துடுப்புமட்டையை மாற்றவேண்டியேற்பட்ட முதலாவது சந்தர்ப்பமாகும்.

## றியல் மட்ரிட்டின் முகாமையாளராக க்ளொப்?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் முகாமையாளராக கார்லோ அன்சிலோட்டியை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூலின் முன்னாள் முகாமையாளர் ஜுர்ஜன் க்ளொப் பிரதியிடக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

அன்சிலோட்டியின் மட்ரிட்டுடனான ஒப்பந்தமானது அடுத்தாண்டு முடிவடைகின்ற நிலையில், றெட் புல்லின் கால்பந்தாட்டத்துக்கான பூகோளத் தலைவராக க்ளொப் காணப்படுகின்றார்.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் நடப்புச் சம்பியன்களான மட்ரிட் இரண்டாமிடத்தில் பின்தங்கியுள்ளது.



## யுனைட்டெட் செல்லும் றம்ஸ்டேல்?




இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செளதாம்டனின் கோல் காப்பாளரான ஆரோன் றம்ஸ்டேலைக் கைச்சாத்திடுவது குறித்து இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் ஆராய்வதாகக் கூறப்படுகிறது.

யுனைட்டெட்டின் கோல் காப்பாளர் அன்ட்ரே ஒனானாவின் பெறுபேறுகள் மோசமாக உள்ள நிலையில், செளதாம்டனுடன் கடந்தாண்டே நான்காண்டு ஒப்பந்தத்தை 26 வயதான றம்ஸ்டேல் கைச்சாத்திட்டிருந்தார்.

அமெரிக்கா

சீனாவிடமே

# முடிவு உள்ளது



வரிப் பிரச்சினையில் இனி சீனா தான் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும் எனவும் அவர்களிடம் தான் முடிவு இருக்கிறது எனவும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும் வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலாளர் கரோலின் லீவிட் கூறுகையில், “சீனாவிடம் தான் முடிவு எடுக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. அவர்கள் தான் எங்களுடன் பேச்சுவார்த்தைக்கு வர வேண்டுமே தவிர நாங்கள் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியமில்லை.

“எல்லா நாடுகளுக்கும் வரி விதித்ததைப் போலவே சீனாவுக்கும் வரி விதித்துள்ளோம். சீனா எங்களின் பணத்தை எடுத்துக் கொள்ள முற்படுகிறது. அதனால் அவர்களுக்கு கூடுதல் வரியை விதித்துள்ளோம்” என்று கூறியுள்ளார்.

சீனா



## சீனாவின் புதிய உத்தரவு

அமெரிக்க நாட்டின் விமான தயாரிப்பு நிறுவனமான ‘போயிங்’கிடம் இருந்து விமானங்கள் வாங்க தமது விமான நிறுவனங்களுக்கு சீன அரசாங்கம் தடை விதித்துள்ளது.


மேலும், விமானம் தொடர்பான எந்த கருவிகளையும் அமெரிக்காவிடமிருந்து வாங்க வேண்டாம் எனவும் உள்நாட்டு விமான நிறுவனங்களுக்கு சீனா உத்தரவிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தானில்:

## நிலநடுக்கம்

### ரிக்டர் அளவில் 5.9 ஆக பதிவு



ஆப்கானிஸ்தானில் புதன்கிழமை (16) அதிகாலை 4.43 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரிக்டர் அளவில் 5.9 ஆக பதிவான நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் அதிர்ந்துள்ளன.

அந்நாட்டின் இந்துகுஷ் மாகாணம் பஹ்லன் நகரில் இருந்து 164 கிலோ மீட்டர் தொலைவில் 75 கிலோ மீட்டர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கம் இந்தியாவிலும் உணரப்பட்டுள்ளது.

தலைநகர் டெல்லி உட்பட வட இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் நில அதிர்வு ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடெல்லி

குழந்தை காணாமல் போனால்

## வைத்தியசாலை உரிமம் இரத்தாகும்



குழந்தை கடத்தல் விவகாரம் குறித்து வேதனை தெரிவித்த உச்சநீதிமன்றம், இதைத் தடுப்பதற்கான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

பச்சிளம் குழந்தை வைத்தியசாலையில் காணாமல் போனால், அதன் உரிமத்தை முதலில் இரத்து செய்ய வேண்டும் என உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

நாட்டில் குழந்தை கடத்தல் சம்பவம் அதிகளவில் நடைபெறுகிறது. தேசிய குற்ற ஆவணக் காப்பகம் புள்ளி விபரத்தின்படி, ஆண்டுக்கு சராசரியாக சுமார் 2000 குழந்தை கடத்தல் வழக்குகள் பதிவாகின்றன. பெரும்பாலான சம்பவங்கள் தெலங்கானா, மகாராஷ்டிரா, பிஹார் போன்ற மாநிலங்களில் நடைபெறுகின்றன.

இந்நிலையில் உத்தர பிரதேசத்தில் குழந்தை கடத்தல் வழக்கு ஒன்றில் குற்றவாளிகளுக்கு அலகாபாத் உயர் நீதிமன்றம் பிணை வழங்கியதை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா மற்றும் ஆர். மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள் கூறியதாவது:

“குழந்தை கடத்தல் வழக்கில் பிணை மனுக்கள் இரக்கமின்றி பரிசீலிக்கப்பட்டுள்ளன. விடுவிக்கப்பட்ட குற்றவாளிகளில் பலர் மாயமாகிவிட்டனர். இவர்களுக்குப் பிணை வழங்கும்போது, காவல் நிலையத்தில் வாரம் ஒரு முறை கையெழுத்திடும் படியாவது நிபந்தனை விதித்திருக்க வேண்டும்.

“அவ்வாறு நிபந்தனை விதிக்கப்படாததால் குற்றவாளிகள் தப்பியுள்ளனர். இந்த வழக்கை உ.பி.அரசு கையாண்ட விதம் முற்றிலும் ஏமாற்றம் அளிக்கிறது. இதில் மேல் முறையீடு செய்யப்படவில்லை.

ஆண் குழந்தை வேண்டும் என விரும்பிய குற்றவாளிகள் ரூ.4 இலட்சம் கொடுத்து ஆண் குழந்தையைப் பெற்றுள்ளனர். ஆண் குழந்தை வேண்டும் என்றால் கடத்தப்பட்ட குழந்தையை வாங்கக் கூடாது. இந்த வழக்கில் குற்றவாளிகள் அனைவரையும் நீதிமன்ற காவலில் அனுப்ப வேண்டும். அவர்கள் மீது ஒரு வாரத்தில் குற்றச்சாட்டுப் பதிவு செய்ய வேண்டும். தலை மறைவு குற்றவாளிகளுக்குப் பிணையில் வெளி வரமுடியாது, பிடியாணை பிறப்பிக்க வேண்டும்.

“நாடு முழுவதும் குழந்தை கடத்தல் வழக்குகளின் நிலவரங்கள் குறித்த அறிக்கை பெற உயர்நீதிமன்றங்கள் உத்தரவிட வேண்டும். இதில் அலட்சியம் காட்டப்பட்டால், நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்படும்” என தெரிவித்தனர்.

தமிழகம்

தீ விபத்தில்

## 7,000 கோழிகள் தீக்கிரை



சேதுபாவாசத்திரம் அருகே கோழிப் பண்ணையில் ஏற்பட்ட தீ விபத்தில், சுமார் 7,000 கோழிகள் கருகி உயிரிழந்தன. இதில் 58க்கும் மேற்பட்ட தென்னை மரங்களும் எரிந்து நாசம் அடைந்தன.

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் அருகே உள்ள சொக்கநாதபுரம் ஊராட்சி, ஒளிராமன்காடு கிராமத்தைச் சேர்ந்தவர் வீரசிங்கம். இவருடைய மனைவி மகாலட்சுமி (வயது 48).

விவசாயியான இவர் அங்குள்ள பர்மா காலனி என்ற இடத்தில் 2 இடங்களில் கொட்டகை அமைத்து அதில் 7,000 கோழிகளை இறைச்சிக்காக வளர்த்து வந்தார்.

இந்த கோழிப்பண்ணையில் எதிர்பாராதவிதமாக தீ விபத்து ஏற்பட்டுத் தீப்பற்றி எரிந்தது. இதில் கோழிகள் இருந்த 2 கொட்டகைகளும் முற்றிலும் எரிந்து அதிலிருந்த 7,000 கோழிகளும் கருகி உயிரிழந்தன.

இந்த தீ விபத்தில் கோழிப்பண்ணையிலிருந்த 58க்கும் மேற்பட்ட தென்னை மரங்களும் எரிந்து நாசமானது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 17, ஏப்ரல் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.